பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 211 நாள் : 21.12.2018

**சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற உள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, 22.12.2018 அன்று சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் சென்னை மாவட்டத்திலுள்ள 3,754 வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளும் கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இந்தக்கூட்டத்தில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டு, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வாக்காளர் பட்டியல் தொடர்பான கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் எழுத்து பூர்வமாக தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி